THE HINDU
Dated: 25.2.2024

# 'Officials must ensure free and fair Lok Sabha polls'


The Hindu Bureau
CHENNAI

Chief Election Commissioner Rajiv Kumar said on Saturday that the Election Commission of India (EC), the Collectors, and enforcement agencies had been directed to ensure that the upcoming Lok Sabha election was free of inducements, fair, and transparent. The EC would come down heavily on the police if they did not ensure a level playing field, he said.

After concluding a two-day review of poll preparedness in Tamil Nadu, Karnataka, and Kerala, he said: "Voters can use the cVIGIL mobile app. It is everybody's duty to curb money power..."

## From Page One

# 'LS poll will be kept fair and transparent'



Chief Election Commissioner of India Rajiv Kumar addressing presspersons on Saturday. Election Commissioner Arun Goel is also seen. R. RAVINDRAN

"...If a voter has any information about distribution of money, liquor, or freebies, they can report it anonymously. The report will be automatically geo-tagged, and within 100 minutes, our team will reach the spot and decide whether to take action or not," Mr. Kumar added.

"A total of 145 checkposts will be set up at inter-state borders. Officials have also been directed to keep a strict watch on electricity bills and godowns with fast-moving goods. The agencies have been directed not to stop with just individuals but take action against the entire network...," he said.

"Around 9.18 lakh voters are aged 18-19. We have appointed dedicated assistant electoral registration officers (AEROs) in colleges. We also have 5.26 lakh first-time voters in Tamil Nadu and have ensured the enrolment of 1.61 lakh voters from the vulnerable tribal groups," Mr. Kumar said, and added that party representatives had requested the EC to crack down on the use of money power and inducements during the election and said they wanted candidates found indulging in malpractice to be disqualified.

"There are more than 100 questions answered and over 30 decisions of the High Courts and the Supreme Court on the ECI website. All the points have been discussed and debated at length. We are working within the judicial mandates and legislative provisions," he said.

Election Commissioner Arun Goel, Tamil Nadu Chief Election Officer Satyabrata Sahu and other senior officials were also present.

TIMES OF INDIA Dated: 25.2.2024

# Police prevent city disability activists from meeting ECI


Police on Saturday prevented a wheelchair-bound woman and a visually challenged man, both disability rights activists, who had gone to a city hotel to meet Election Commission of India officials, and took them to Pazhavanthangal police station, over fears of a security threat. Activisits Smitha Sadasivan and Raghuram Kalyanaraman said they were taken in a police vehicle to the police station. "After intervention of higher officials, police released both of us," Smitha Sadasivan said. Later, they met ECI officials. P6

# Police stop disability activists from meeting ECI officials, relent later

TIMES NEWS NETWORK

**Chennai:** Fearing a security threat, police stopped two disability rights activists, one a wheelchair-bound woman and the other a visually challenged man, who had come to meet Election Commission of India (ECI) officials at a city hotel on Saturday and took them to Pazhavanthangal station.

Smitha Sadasivan and Raghuram Kalyanaraman, both members of the state's advisory board on disability, said they were taken away in a police vehicle to Pazhavanthangal station. "After intervention from higher officials, police released both of us. We were detained at the station for nearly 15 minutes for no fault of ours. We were then taken back to the hotel," said Smitha Sadasivan. Later, the two met officials from the ECI, including deputy election commissioner Ajay Bhadoo.



Detained for 15 minutes

While officials from ECI were not reachable for comment, police officials told TOI that the two were stopped because they had neither an entry pass nor an appointment to meet the ECI officials. Security had been beefed up at the hotel as there were DGPs from three neighbouring states, besides senior officials and political functionaries, at the venue.

"They were stopped and questioned, as we got a tip off that visually challenged people, who have been staging protests across the city daily for the past 15 days, have planned to meet ECI officials. We treated them with care after the ECI officials agreed to meet them," a police officer said.

"All we asked for is some dignity for people with disabilities. They apologised for what had happened to us," Sadasivan said.

The two activists came to the venue to meet and request the ECI officials to make polling booths across the state more accessible for people with disabilities during the coming Lok Sabha elections.

TIMES OF INDIA

Dated : 25.02.2024

# ECI will ensure transparent polls, says chief election commissioner

## 145 Check Posts Set Up In 17 Districts In TN For Strict Vigil

TIMES NEWS NETWORK




TOI

**SAY NO TO BRIBES:** Chief election commissioner Rajiv Kumar with election commissioner Arun Goel held meetings with officials of the election department of TN and neighbouring states on Saturday

**Chennai:** Chief election commissioner Rajiv Kumar on Saturday said Election Commission of India (ECI) was determined to ensure inducement-free elections and that bribing voters with money and liquor won't be tolerated.

Rajiv Kumar along with election commissioner Arun Goel held meetings with officials of the election department of Tamil Nadu and neighbouring states that began on Friday.

Addressing reporters after the meetings, Rajiv Kumar said, "ECI is strongly determined about inducement free elections. By this we mean that misuse of money will not be tolerated. Inducement in any form such as distribution of money or liquor will not be tolerated." The ECI officials met with representatives from various enforcement agencies in the past two days and stressed on the need to curb misuse of money and voter bribing in the state during elections.

Rajiv Kumar said 145 check posts were set up in 17 districts in the state "to maintain strict vigil on cash and liquor flow across the inter-state borders". Rajiv Kumar said, "The enforcement agencies have been directed to dry up inflow and distribution of freebies and drugs as well. There will be strict vigil at airports and even coastal areas. We have directed them (enforcement agencies) not to stop searches of people but to identify kingpins from whom money is circulated," Rajiv Kumar said. Explaining about the newly launched cVigil mobile app, Rajiv Kumar said, "The app is a one stop solution for voters to record, report and to resolve violations. People who register the complaint need not inform their location. The app will record the GIS location of people and will alert officials for immediate action."

Rajiv Kumar said there were 68,144 polling stations and ECI has mandated webcasting in 50% of polling stations. Tamil Nadu chief electoral officer Sathyabrata Sahoo might increase it to 66% or even more, said Rajiv Kumar. Asked how the ECI handled the electoral bond system, Rajiv Kumar said, "ECI will ensure that transparency is followed in every electoral procedure." He declined to divulge further details about the electoral bond system, which the Supreme Court recently struck down.

The ECI officials held meetings with representatives of various political parties in the state and obtained their inputs and complaints.

DECCAN CHRONICLE Dated: 25.02.2024

# EC TO MAKE PROFORMA FOR POLL PROMISES: CEC

**Chennai, Feb. 24:** The voters have a right to know about the feasibility of fulfilling poll assurances made by political parties, Chief Election Commissioner Rajiv Kumar said on Saturday and made it clear that the matter is however, sub judice.

Political parties have a right to make promises in their election manifestoes and the electorate has a right to know if these are genuine and how these programmes could be funded, he said, adding the entire matter forms part of an ongoing case and the matter was sub judice.

In a press conference here, Mr Kumar said the Election Commission has prepared a 'proforma' to make parties to make disclosure on their election P4

# Voters have right to know about fulfillment of assurances by parties; matter sub judice: CEC

**Chennai, Feb 24:** The voters have a right to know about the feasibility of fulfilling poll assurances made by political parties, Chief Election Commissioner Rajiv Kumar said on Saturday and made it clear that the matter is, however, sub judice. Political parties have a right to make promises in their election manifestos and the electorate has a right to know if these are genuine and how these programmes could be funded, he said, adding the entire matter forms part of an ongoing case and the matter was sub judice.

At a press conference here, Rajiv Kumar, answering questions, said the Election Commission has prepared a 'proforma' to allow parties to make a disclosure on their election promises. However, this aspect also relates to the pending court matter.

He said enforcement agencies have been directed to stay vigilant and prevent distribution of cash and freebies. National Payments Corporation of India too has been tasked to monitor online transactions.

To a query on 'fake news,' he said, today fake news is running as you mentioned that election dates have been announced. This fake news has, however, been countered within half an hour and it was made amply clear that it was fake.

A majority of political parties have sought single phase polls. After holding meetings with political parties during the last two days, Rajiv Kumar said "a majority of parties informed him that many parties have commenced parking of funds for distribution to voters."

"We met various political parties both national like the BJP, INC and state parties like the AIADMK, DMK. A majority of their demands were single phase elections, curb on distribution of money and freebies," he said.

The parties also sought action to prevent 'voter impersonation,' distribution of liquor and transfer of money through online mode.

During past elections in Tamil Nadu, parties have often accused each other of 'inducing' voters by distributing cash and gifts.

Kumar today said most of the political parties in Tamil Nadu have urged the EC to conduct the upcoming Lok Sabha elections in a single phase in the state.

At the end of his two-day visit to Tamil Nadu to review poll-preparedness, he said the Election Commission (EC) would come down heavily on those officials who do not ensure level playing field to parties as "in a democracy, officials should be absolutely impartial."

He said, "most of the political parties want single phase polling and demanded steps to curtail use of money power during the elections.

They also sought disqualification of candidates who are found distributing cash during the elections or any inducement."

"Process wise, they (political parties) have said that the bureaucratic machinery needs to be impartial. They need to provide a level playing field so that every candidate is treated equally."

—PTI

DECCAN CHRONICLE

Dated: 25.02.2024

# Ahead of polls, EC issues new transfer policy of govt officers

DC CORRESPONDENT
NEW DELHI, FEB. 24

Days before it is set to announce the Lok Sabha elections, the Election Commission (EC) directed the state governments to ensure that officers, who are transferred out of the districts after completing three years, are not posted in another district within the same parliamentary constituency.

In its letter to the states and Union territories, the EC has said that the "transfer policy" should be implemented in both letter and spirit. "Taking serious note of the cases wherein officers are being transferred or posted in the adjacent districts within the same parliamentary constituency by the state governments, the EC has strengthened its existing "transfer policy" to ensure that officials are not able to disturb the "level playing field" in the elections. Plugging the loopholes in the existing instructions, the poll body has directed that, except for the states/UTs that comprise up to two parliamentary constituencies, all states shall ensure that officers who are transferred out of the district are not posted within the same parliamentary constituency," the EC directive said.

It reiterated that the "transfer policy" of the commission must be adhered to in both letter and spirit and "not just being camouflaged to show compliance".

This rule applies retrospectively to transfers and postings that have already been implemented in accordance with the commission's prior instructions.

# PAWAR UNVEILS PARTY'S NEW ELECTION SYMBOL

SONU SHRIVASTAVA
MUMBAI, FEB. 24

NCP founder Sharad Pawar on Saturday unveiled his party's new election symbol, 'man blowing *turha*', at a grand event at Chhatrapati Shivaji Maharaj's Raigad fort. Mr Pawar said that the *turha* (traditional trumpet) will give inspiration to begin a battle and bring joy in the lives of the people.

The BJP and MNS on Saturday ridiculed the NCP founder for holding the event at Raigad fort. MNS chief Raj Thackeray alleged that Mr Pawar never took Chhatrapati Shivaji's name in public meetings because he fe-ared losing Muslim votes.

D.T. NEXT
Dated: 25.02.2024

## TN parties for single-phase LS election; EC to consider



CHENNAI: Chief Election Commissioner (CEC) of India Rajiv Kumar on Saturday said the political parties in the State have urged him to conduct the general election in a single phase besides requesting to curb the vote for money and distribution of freebies during the poll campaign. Rajiv Kumar, who was here to review the poll preparedness said their request would be taken into consideration.

▸ More on P5

# Prepared proforma for poll promises: CEC

*EC will consider TN parties' demand for single-phase election, assures Rajiv Kumar*

**CHENNAI: The voters have a right to know about the feasibility of fulfilling poll assurances made by political parties, Chief Election Commissioner Rajiv Kumar said on Saturday and made it clear that the matter is, however, sub judice.**



CEC Rajiv Kumar addresses a press conference in Chennai on Saturday

Political parties have a right to make promises in their election manifestos and the electorate has a right to know if these are genuine and how these programmes could be funded, he said, adding the entire matter forms part of an ongoing case and the matter was sub judice.

At a press conference here, Rajiv Kumar, answering questions, said the Election Commission has prepared a 'proforma' to make parties to make a disclosure on their election promises. However, this aspect also relates to the pending court matter.

To a question on 'fake news,' he said, 'today fake news is running as you mentioned that election dates have been announced,' This fake news has, however, been countered within half an hour.

Rajiv Kumar, who was here in Chennai to review the poll preparedness for general election to Lok Sabha, 2024, said that with political parties requesting to conduct single-phase elections, their request would be taken into consideration. However, he said the Election Commission of (EC) could not commit at this point of time.

"They (political party leaders) also asked us to control the proliferation of liquor during the polling campaign," he added.

Stating that there would be a total of 145 check posts along the Tamil Nadu, Andhra Pradesh, Kerala and Karnataka border, he said the security forces in the check post will ensure there would not be any transportation of liquor from one state to another. "Ambulances and cash vending machines for ATMs will be closely monitored," he said adding "even Coast Guards will be on alert to stop smuggling."

With regard to small money transactions to several accounts, he said apart from the banks, the EC will also keep track of the fund transfers to multiple bank accounts. National Payments Corporation of India too has been tasked to monitor online transactions. "Banks were also instructed to keep high vigil on high money transactions," he added.

CEC Rajiv said that Electronic Voting Machines (EVMs) and Voter-verified paper audit trail (VVPAT) will be used with some technical improvements. The CEC also said during this general election, the voter slips will be distributed one week before the election date. "So that the voters will know their polling booth well in advance," he said.

### cVIGIL usage

Pointing out that cVIGIL, a mobile application developed by the EC, will enable to report violations of the Model Code of Conduct (MCC) during elections, Rajiv Kumar said "some features of the App allows users to report violations of MCC, provides a platform for citizens to participate in the electoral process, uses GPS to track the location of the violation, allows users to capture the live incidents only, tracks the progress of the complaint and features to report the case of MCC violation anonymously."

D. T. NEXT

Dated 25. 02. 2024

# EC tweaks transfer policy to check states' 'use' of officers

**NEW DELHI: The Election Commission has asked states to ensure that officers who are transferred out of a district ahead of polls as part of its policy are not posted in any district within the same parliamentary constituency.**

By tweaking its policy on transferring officers ahead of elections, the EC has sought to plug loopholes being exploited by state governments.

The move comes after the poll authority took serious note of cases in which officers were being transferred in adjacent districts within the same parliamentary constituency by state governments. According to the policy of the Election Commission (EC), all officers who were either posted in their home district or have completed three years at a place are transferred out ahead of Lok Sabha or assembly polls to ensure they do not disturb the level-playing field in favour of a candidate or a party.

"The commission has strengthened its existing transfer policy to ensure that officials are not able to disturb the level-playing field in the elections," the election commission said in a statement on Saturday.

"Plugging the loopholes" in the existing instructions, the election commission has directed that, except for states and union territories that comprise up to two parliamentary constituencies, all states shall ensure that officers who are transferred out of the district are not posted within the same parliamentary constituency, the election commission said.

> The commission has strengthened its existing transfer policy to ensure that officials are not able to disturb the level-playing field in the elections
> – Election Commission

The EC under Chief Election Commissioner Rajiv Kumar has told states that the policy must be adhered to in both letter and spirit and not just being camouflaged to show compliance.

There has been a zero-tolerance policy of the commission against disturbing the level-playing field in the elections, it pointed out.

In the recently-held assembly elections in five states, the election commission had ordered transfer of various officials, including the top police officials.

Following the election commission's directions based on the policy, Brihanmumbai Municipal Corporation (BMC) Commissioner IS Chahal and Pune Municipal Corporation (PMC) Commissioner Vikram Kumar are set to be transferred.

THE HINDU - TAMIL

Dated : 25.02.2024

### தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்துவது குறித்து ஆலோசித்து முடிவு

# முறைகேடு நடந்தால் 100 நிமிடங்களில் நடவடிக்கை

### ● சென்னையில் தலைமை தேர்தல் ஆணையர் தகவல்

● சென்னை

தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்துவது குறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்று தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தெரிவித்தார்.




மக்களவைத் தேர்தலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னையில், தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் தேர்தல் ஆணையர் அருண் கோயல் உள்ளிட்ட அதிகாரிகள்.

மக்களவைத் தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் விரைவில் அறிவிக்கவுள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் பணிகள் ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் நடந்த கூட்டத்தில் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இரண்டாம் நாளான நேற்று, தமிழகம், கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் தங்களின் மாநிலங்களில் தேர்தல் ஏற்பாடுகள், சட்டம் ஒழுங்கு குறித்து விளக்கினர். தொடர்ந்து தமிழக அரசின் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, தமிழக காவல் துறை டிஜிபி சங்கர் ஜிவால் மற்றும் வருமான வரித்துறை, வருவாய் புலனாய்வுத் துறை, சிஆர்பிஎப் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

பின்னர், செய்தியாளர்களிடம் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் கூறியதாவது:

**அரசியல் கட்சிகள் கோரிக்கை**

தமிழகத்திலுள்ள 6.19 கோடி வாக்காளர்களில், 18-19 வயதுக்குட்பட்ட 9.18 லட்சம் பேர் முதல் முறை வாக்காளர்களாக உள்ளனர். தமிழகத்தில் தேர்தலின்போது வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க வேண்டும். ஓட்டுக்காக பணம், மது, பரிசுப் பொருட்கள் கொடுக்கும் வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும். அனைத்து வேட்பாளர்களையும் சரிசமமாக நடத்த வேண்டும்.

குறிப்பாக, தேர்தல் அலுவலர்கள் நேர்மையாக செயல்பட வேண்டும். அதிக அளவில் சிசிடிவி பொருத்த வேண்டும். பதற்றமான வாக்குச்சாவடிகளில் துணை ராணுவத்தினரை குவிக்க வேண்டும். தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்த வேண்டும். ஓரிடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரையும் இடமாற்றம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை அரசியல் கட்சிகள் வைத்தன.

இதுதொடர்பாக தேர்தல் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் அனைவருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. சுதந்திரமான, வெளிப்படையான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நோக்கம் ஆகும்.

66 ஆயிரத்து 144 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 66 சதவீதம் வாக்குச்சாவடிகளில் 'வெப் காஸ்டிங்' என்ற, வாக்குப்பதிவை நேரடியாக கண்காணிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. சி-விஜில் என்ற செயலியை ஏற்கெனவே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் தேர்தல் முறைகேடுகளை படம் எடுத்தோ அல்லது எழுத்து குறிப்பையோ பதிவேற்றம் செய்தாலே போதும். இடத்தை தேர்தல் அதிகாரிகள் அறிந்து, முறைகேடுகள் மீது 100 நிமிடங்களில் நடவடிக்கை எடுப்பார்கள். இதன் மூலம் ஓட்டுக்கு பணம், பரிசுகள் கொடுப்பதை மக்களே கட்டுப்படுத்த முடியும்.

ஆந்திரா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களின் எல்லைகளை ஒட்டி வரும் 17 தமிழக மாவட்டங்களில் கடுமையான கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மது, போதைப் பொருள் கடத்தல், பணப்பட்டுவாடா உள்பட எந்தவித தேர்தல் விதி மீறல்களை கண்டறிந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி மாநில போலீஸார், விமான நிலையம், ரயில்வே, வங்கி அதிகாரிகள் என 19 அமலாக்க முகமைகளுக்கு கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். ஆன்லைன் பணப் பறிமாற்றமும் தீவிரமாக கண்காணிக்கப்படும்.

அரசியல் கட்சிகள், வேட்பாளர்களின் கோரிக்கைகள் ஒற்றைச் சாளர முறையில் நிறைவேற்றப்படும். வாக்குப்பதிவுக்கு 7 நாட்களுக்கு முன்பாக வாக்காளர்களுக்கு பூத் சிலிப்கள் தரப்படும். தமிழகத்துக்கு ஒரே கட்ட தேர்தல் என்ற கோரிக்கை பற்றி ஆலோசித்து முடிவு செய்யப்படும். எந்த விதமான தேர்தல் பத்திரங்கள் என்றாலும் அவை வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதுதான் தேர்தல் ஆணையத்தின் விருப்பம். மாவட்ட தேர்தல் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் தனிப்பிரிவை ஏற்படுத்தி கண்காணிக்க வேண்டும். தேர்தல் தொடர்பான பொய்த்தகவல்களை பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

The Hon'ble CEC has informed that Action will be taken within 100 minutes if there is any malpractices done during Election in Tamil Nadu and also conduct of Election in single phase in Tamil Nadu will be decided.

DAILY THANTHI
Dated: 25.02.2024

2

## நாடாளுமன்ற தேர்தல்:

# தமிழ்நாட்டில் ஒரே கட்ட வாக்குப்பதிவா?

## தலைமை தேர்தல் கமிஷனர் பதில்



சென்னையில் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் தலைமையிலான தேர்தல் அதிகாரிகள் பத்திரிகையாளர்களை சந்தித்த போது எடுத்த படம்.

சென்னை, பிப்.25-

நாடாளுமன்ற தேர்தலின் போது, தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுமா என்பதற்கு தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் பதில் அளித்துள்ளார்.

### தலைமை தேர்தல் கமிஷனர் ஆய்வு

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் தயார்நிலை குறித்து சென்னையில்இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் தலைமையில் தேர்தல் கமிஷனின் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் கடந்த 2 நாட்களாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

முதல் நாளான நேற்று முன்தினம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் ஆலோசனை நடத்தி, கருத்துக்களை கேட்டார். பின்னர் மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

### தலைமைச் செயலாளர் - டி.ஜி.பி.

நேற்று நடந்த கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் தங்களின் மாநிலங்களில் உள்ள தேர்தல் ஏற்பாடுகள், தயார் நிலை, முன்னெச்சரிக்கை, சட்டம்-ஒழுங்கு ஆகியவை பற்றிய படக்காட்சி விளக்கத்தை தலைமை தேர்தல் கமிஷனரிடம் அளித்தனர்.

பின்னர் வருமான வரிதுறை, வருவாய் புலனாய்வு துறை, சுங்கத் துறை, அமலாக்கத் துறை, சி.ஆர்.பி.எப்., ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., ஜி.எஸ்.டி. போன்ற அமலாக்க முகமைகளின் அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

அதன் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

### கட்சிகளின் கோரிக்கை

தமிழகத்தில் 6.19 கோடி வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் 9.18 லட்சம் பேர், 18 - 19 வயதுக்குட்பட்ட முதன்முறை வாக்காளர்களாகும். அரசியல் கட்சியினர் எங்களிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். தமிழகத்தில் தேர்தலின்போது பணபலத்தை கட்டுப்படுத்த வேண்டும்; ஓட்டுக்காக பணம், மது, வெகுமதி அளிக்கும் வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்; அனைத்து வேட்பாளர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். தேர்தல் அலுவலர்கள் நேர்மையாக செயல்பட வேண்டும்.

வேட்பாளர் தொடர்பான இடங்களில் சோதனை மேற்கொள்ளும் நிலையில், அவர்களுக்கு தேர்தல் பறக்கும்படையில் உள்ளவர்களே தகவல் கொடுப்பதாக சந்தேகம் உள்ளது; தேர்தல் பார்வையாளர்களை கட்சி பிரதிநிதிகள் நேரில் சந்தித்து பேசுவதற்கான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் சிசிடிவி கேமரா பொருத்தப்பட வேண்டும்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் அதிக துணை ராணுவத்தினர் நிறுத்தப்பட வேண்டும்; ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்த வேண்டும்; கள்ள ஓட்டுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெறுப்பு பிரசாரத்தை தடுக்க வேண்டும். இளம் வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வாக்காளர் பட்டியலை இன்னும் சரிசெய்ய வேண்டும். வாக்குப்பதிவின் போது ஆள்மாறாட்டம் நடக்காதபடி இரண்டு முறை சரி பார்க்க வேண்டும். ஓரிடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் அலுவலர்கள் அனைவருமே தேர்தலின்போது இடமாற்றம் செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன.

### ஓட்டுக்கு பணம்

இதுபற்றி தேர்தல் அதிகாரிகள், அமலாக்க முகமை அதிகாரிகள் அனைவருக்கும் கண்டிப்பான அறிவுரைகளை வழங்கி இருக்கிறோம். ஓட்டுக்கு பணம் வழங்காத, சுதந்திரமான மற்றும் வெளிப்படையான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். ஓட்டுக்காக பணம் வழங்குவதை தேர்தல் கமிஷன் பொறுத்துக் கொள்ளாது.

17 வயது பூர்த்தி அடைந்த 65 ஆயிரம் பேர் வாக்காளர் பட்டியலில் சேர விண்ணப்பித்துள்ளனர். 18 வயது பூர்த்தியானதும் அவர்கள் சேர்க்கப்படுவார்கள். 66 ஆயிரத்து 144 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 66 சதவீதம் வாக்குச்சாவடிகளில் 'வெப்காஸ்டிங்' என்ற வாக்குப்பதிவை நேரடியாக கண்காணிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்த வாக்காளர்கள், மாற்றுத்திறனாளி வாக்காளர்கள், தேர்தல் அறிவிப்பு வெளியான 5 நாட்களுக்குள் 12-டி விண்ணப்பத்தை அளித்தால் அவர்களுக்கும் தபால் ஓட்டு வசதி செய்துதரப்படும். சி-விஜில் என்ற செயலியை ஏற்கனவே அறிமுகம் செய்துள்ளோம். இதில் தேர்தல் முறைகேடுகளை படம் எடுத்தோ அல்லது எழுத்து குறிப்பையோ பதிவேற்றம் செய்தாலே போதும். இடத்தை தேர்தல் அதிகாரிகள் அறிந்து, முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுப்பார்கள். ஓட்டுக்கு வெகுமதி கொடுப்பதை இதன் மூலம் மக்களே கட்டுப்படுத்தலாம்.

குற்றப் பின்னணியுள்ள வேட்பாளர்களை மக்கள் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகளையும் தேர்தல் கமிஷன் உருவாக்கித் தந்துள்ளது. வேட்பாளர்கள் பற்றி தெரிந்துகொள்ள கே.ஒய்.சி. என்ற செயலியை பயன்படுத்தலாம்.

### கடும் நடவடிக்கை

ஆந்திரா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களின் எல்லைகளை ஒட்டி வரும் 17 தமிழக மாவட்டங்களில் கடுமையான கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக 145 சோதனைச்சாவடிகள் வைக்கப்பட்டுள்ளன. மது, போதைப்பொருள் கடத்தல், பணப்பட்டுவாடா உள்பட எந்தவித தேர்தல் விதி மீறல்களை கண்டறிந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி மாநில போலீசார், விமான நிலையம், ரெயில்வே, வங்கி அதிகாரிகள் என 19 அமலாக்க முகமைகளுக்கு கண்டிப்பான உத்தரவுகளை பிறப்பித்து இருக்கிறோம்.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பணம் கொண்டு செல்வதை தீவிரமாக கண்காணிப்போம். தேர்தலுக்கு முன்பு பணம் எங்காவது பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என்பதையும் கண்காணிக்க உத்தரவிட்டுள்ளோம். பணம், மது போன்றவற்றை வழங்கினால் அதன் பின்னணியில் இருப்பது யார் என்பதையும் கண்டறிந்து அவர்கள் மீது வழக்கு தொடர உத்தரவிட்டுள்ளோம்.

### தீவிர கண்காணிப்பு

ஆன்லைன் பணப்பறிமாற்றமும் தீவிரமாக கண்காணிக்கப்படும். ஏ.டி.எம். எந்திரங்களில் பணம் போடுவதற்காக எடுத்துச்செல்லும் குறிப்பிட்ட வாகனங்களை குறிப்பிட்ட நேரத்திற்குள் பயன்படுத்தும்படி உத்தரவிட்டுள்ளோம். இந்த வாகனங்களும், ஆம்புலன்ஸ் வாகனங்களும் தீவிர கண்காணிப்பில் இருக்கும்.

தேர்தல் விதிமுறை மீறலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் பாரபட்சம் இருப்பதை தேர்தல் கமிஷன் ஏற்காது. இதில் கூடுதல் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் அலுவலர் இடமாற்றக் கொள்கை பலப்படுத்தப்பட்டுள்ளது. ஓரிடத்தில் 3 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள அரசு ஊழியர், அந்த நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படாமல், வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படுவார்.

அரசியல் கட்சிகள், வேட்பாளர்களின் கோரிக்கைகள் ஒற்றைச்சாளர முறையில் நிறைவேற்றப்படும். வாக்குப்பதிவுக்கு 7 நாட்களுக்கு முன்பாக வாக்காளர்களுக்கு பூத்சிலிப்கள் தரப்படும். அனைத்து வாக்காளர்களும் வாக்கு செலுத்த வேண்டும்.

### ஒரே கட்ட தேர்தலா?

தமிழகத்திற்கு ஒரே கட்ட தேர்தல் என்ற கோரிக்கை பற்றி பின்னர் முடிவு செய்யப்படும். ஆன்லைன் பணப்பறிமாற்றங்களை நாங்கள் எப்படி கண்காணிப்போம் என்பதை வெளிப்படையாக கூற முடியாது. ஆனால் கண்காணிப்பு மிகத் தீவிரமாக இருக்கும். வேறு வழிகளில் பணப்பட்டுவாடாவை நடத்த முயற்சித்தால் அதையும் விரைவாக கண்டுபிடித்துவிடுவோம்.

மின்னணு வாக்கு எந்திரம், வாக்கை உறுதி செய்யும் விவிபேட் எந்திரம் பொருத்தப்படும் நிலை பற்றி கேட்டால், 40 ஆண்டுகளாக மின்னணு வாக்கு எந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த தேர்தல்களில் விவிபேட் எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே தொழில்நுட்பங்களின் படி அவை தொடர்ந்து பயன்படுத்தப்படும். இதில் பல கேள்விகள் கேட்கப்பட்டு தேர்தல் கமிஷன் இணையதளத்தில் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. கோர்ட்டுகளிலும் அவை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

### பொய்த்தகவல் பரப்பினால்.....

வாக்குப்பதிவு நடக்கும் நாள் மிக உஷ்ணமாக இருப்பதால் வாக்குச்சாவடிகளில் வாக்காளரின் பாதுகாப்பிற்காக பந்தல் போடப்பட்டு இருக்கும். தேர்தல் பற்றிய பொய்த் தகவல்களை தவிர்க்க ஸ்வீப் என்ற தேர்தல் கமிஷனின் இணையதளத்தை பயன்படுத்துங்கள்.

மாவட்ட தேர்தல் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் தனிப்பிரிவை ஏற்படுத்தி கண்காணிக்க வேண்டும். தேர்தல் தொடர்பான பொய்த்தகவல்களை பரப்புவோர் மீது, தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 69, 79 (3) ஆகிய பிரிவுகள் மற்றும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

### தேர்தல் வாக்குறுதி

கட்சிகளின் நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதிகள் பற்றிய வழக்கு விசாரணை நிலுவையில் இருப்பதால் அது பற்றி கருத்து கூற முடியாது. ஆனால் அது முடியுமா? முடியாதா? என்று அறிந்துகொள்ள வாக்காளர்களுக்கு முழு உரிமை உண்டு. எனவே அது பற்றிய ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். இப்போது அதை சொல்ல இயலாது. எந்த விதமான தேர்தல் பத்திரங்கள் என்றாலும் அவை வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதுதான் தேர்தல் கமிஷனின் விருப்பம்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

**ஆந்திர சட்டசபை தேர்தல்**

## தெலுங்குதேசம்-ஜன சேனா கூட்டணி வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு

அமராவதி, பிப்.25-

விரைவில் நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலுடன் ஆந்திர சட்டசபைக்கும் தேர்தல் நடக்கவுள்ளது. இந்த தேர்தலில் புதிய திருப்பமாக முன்னாள் முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடுவின் தெலுங்குதேசம் கட்சியுடன், பிரபல தெலுங்கு நடிகர் பவன் கல்யாணின் ஜன சேனா கட்சி கூட்டணி அமைத்துள்ளது. தேர்தலில் போட்டியிட உள்ள இந்த கூட்டணியின் முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை இருகட்சி தலைவர்களும் இணைந்து நேற்று வெளியிட்டனர். மொத்தம் உள்ள 175 தொகுதிகளில் 118 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முதல் பட்டியலின்படி, தெலுங்குதேசம் கட்சி வேட்பாளர்கள் 94 தொகுதிகளிலும், ஜன சேனா கட்சி வேட்பாளர்கள் 24 தொகுதிகளிலும் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

சந்திரபாபு நாயுடு தனது சொந்த தொகுதியான குப்பம் தொகுதியில் போட்டியிடுகிறார். அதே சமயம் பவன் கல்யாண் எந்த தொகுதியில் போட்டியிடுகிறார் என்பது அறிவிக்கப்படவில்லை.

The Hon'ble CEC replied regarding Single phase Election in Tamil Nadu.

DAILY THANTHI

Dated: 25.02.2024



தேர்தலையொட்டி

# அதிகாரிகள் இடமாற்றத்தில் புதிய விதி

## தேர்தல் கமிஷன் அறிமுகம் செய்தது

புதுடெல்லி, பிப்.25-

நாடாளுமன்ற தேர்தலையொட்டி, அதிகாரிகள் பணியிடம் மாற்றம் செய்யப்படும் விவகாரத்தில் புதிய வதிமுறையை தேர்தல் கமிஷன் கொண்டு வந்துள்ளது.

### அதிகாரிகள் இடம் மாற்றம்

ஒரே இடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் அல்லது சொந்த மாவட்டத்தில் பணியாற்றும் அரசு ஊழியர்கள், போலீசார் தேர்தல் காலங்களில் பணியிடம் மாற்றம் செய்யப்படுவது உண்டு. அதன்படி குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் பணியாற்றும் ஒரு ஊழியர், வேறு மாவட்டப்பகுதிக்கு மாற்றப்படுவார். தேர்தல் நியாயமாக நடைபெறுவதற்காக இந்த நடைமுறையை தேர்தல் கமிஷன் கடைபிடித்து வருகிறது.

இந்த நடைமுறையில் தற்போது புதிய விதிமுறையை தேர்தல் கமிஷன் கொண்டு வந்துள்ளது. இதுதொடர்பாக தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

### நாடாளுமன்ற தொகுதிக்கு வெளியே...

தேர்தல் நடைமுறையின் ஒரு பகுதியாக அரசு அதிகாரிகள், ஊழியர்கள், போலீசார் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகள் பணி இடம் மாற்றம் செய்யப்படும்போது, அவர்கள் ஒரே நாடாளுமன்றத் தொகுதிக்குள் இருக்கும் மாவட்டங்களில் பணியமர்த்தக்கூடாது.

அவர்களை குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்கு வெளியே உள்ள மாவட்டத்துக்குதான் இடம் மாற்றம் செய்யப்பட வேண்டும். இதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

இந்த விதி 2 நாடாளுமன்ற தொகுதிகள் வரை உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைத் தவிர, அனைத்து மாநிலங்களும் பொருந்தும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Election commission introduced new rules regarding transfer of officials in Tamil Nadu during Election.

DINAMALAR
Dated: 25.02.2024

(4)

# அரசு அதிகாரிகள் இடமாற்ற விவகாரம் மாநிலங்களுக்கு தேர்தல் கமிஷன் எச்சரிக்கை

– நமது சிறப்பு நிருபர் –

'ஒரு மாவட்டத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய, ஐ.ஏ.எஸ்., – ஐ.பி.எஸ்., அதிகாரிகளை, அதே லோக்சபா தொகுதிக்குள் இருக்கும் மற்றொரு மாவட்டத்துக்கு இட மாற்றம் செய்யக் கூடாது' என, அனைத்து மாநில அரசுகளுக்கு தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

வழக்கமாக, சட்டசபை அல்லது லோக்சபா தேர்தல் நடப்பதற்கு முன், ஒரே மாவட்டத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் ஐ.ஏ.எஸ்., – ஐ.பி.எஸ்., அதிகாரிகள் வேறொரு மாவட்டத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்படுவர்.

**புகார்**

வரும் ஏப்., – மே மாதங்களில், லோக்சபா தேர்தல் நடக்கவுள்ள நிலையில், ஐ.ஏ.எஸ்., – ஐ.பி.எஸ்., அதிகாரிகளை, அனைத்து மாநில அரசுகள் பணியிட மாற்றம் செய்து வருகின்றன.

இதில் ஒரு சில மாநில அரசுகள், ஒரே லோக்சபா தொகுதிக்குள் இருக்கும் மற்ற மாவட்டத்துக்கு, அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்வதாக, தலைமை தேர்தல் கமிஷனுக்கு புகார்கள் வந்தன.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, தலைமை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது:

ஒரே லோக்சபா தொகுதிக்குள் இருக்கும் மற்ற மாவட்டத்துக்கு, ஐ.ஏ.எஸ்., – ஐ.பி.எஸ்., அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், இரு லோக்சபா தொகுதிகள் வரை உள்ள மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்கள் தவிர, மற்ற மாநிலங்களில், லோக்சபா தொகுதிக்கு வெளியே உள்ள மாவட்டங்களில், அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்படுவதை அந்தந்த மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

**உத்தரவு**

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பணியிட மாற்ற உத்தரவுகளுக்கும் இந்த நடைமுறை பொருந்தும். இதில் எந்தவித சமரசத்துக்கும் இடமளிக்கக் கூடாது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வாட்ஸாப்பில் தவறான தகவல்

லோக்சபா தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து ஒவ்வொரு மாநிலமாக சென்று, அந்தந்த மாநில அரசுகளுடன் தேர்தல் கமிஷனர்கள் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, தேர்தல் தேதி குறித்த அட்டவணை வெளியாகி உள்ளதாக சமூக வலைதளங்களில் வேகமாக பரவின. அவை போலியான தகவல்கள் என தலைமை தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தலைமை தேர்தல் கமிஷன், தன் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள தகவலில், 'வாட்ஸாப் செயலியில் லோக்சபா தேர்தலுக்கான அட்டவணை தொடர்பாக பரவி வரும் தகவல் முற்றிலும் பொய்.

'இதுவரை, அதிகாரப்பூர்வ அட்டவணை வெளியிடவில்லை. இதுதொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பு வாயிலாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும்' என குறிப்பிட்டுள்ளது.

Election commission of India warns the State Government regarding transfer of Government officials.

DINAMALAR

Dated : 25.02.2024

# சைக்கிள் சின்னம் கோரிய மனு தேர்தல் கமிஷனுக்கு உத்தரவு

**சென்னை, பிப். 25–**

லோக்சபா தேர்தலில், 'சைக்கிள்' சின்னம் ஒதுக்கக் கோரி, த.மா.கா., தாக்கல் செய்த மனுவை, தகுதி அடிப்படையில் பரிசீலிக்க, தேர்தல் ஆணையத்துக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.



தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் தாக்கல் செய்த மனுவில், 'லோக்சபா தேர்தலில், எங்கள் கட்சிக்கு சைக்கிள் சின்னம் ஒதுக்கக்கோரி, தேர்தல் ஆணையத்திடம், இம்மாதம், 6ம் தேதி மனு அளிக்கப்பட்டது.

'எங்கள் மனு குறித்து, இன்னும் தேர்தல் ஆணையம் முடிவு எடுக்கவில்லை. 2019ம் ஆண்டு தேர்தலை போல, இந்த தேர்தலிலும் சைக்கிள் சின்னம் ஒதுக்க உத்தரவிட வேண்டும்' என்று கூறியுள்ளார்.

மனு, நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷபிக் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுதாரார் சார்பில், வழக்கறிஞர்கள் சாய்கிருஷ்ணன், மகாதேவன் ஆஜராகினர்.

தேர்தல் ஆணையம் சார்பில், வழக்கறிஞர் நிரஞ்சன் ஆஜராகி, ''ஆணையத்திடம் அளித்த மனுவில் குறைகள் உள்ளதால், அதை சரி செய்து அளித்தால் பரிசீலிக்கப்படும். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், த.மா.கா.,வின் மனு பரிசீலிக்கப்படும்,'' என்றார்.

இதை பதிவு செய்த நீதிபதிகள், த.மா.கா.,வின் மனுவுக்கு முன்னுரிமை அளித்து, தகுதி அடிப்படையில் பரிசீலிக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டனர்.

THE Madras High Court directed the ECI to respond to the petition filed by Tamil Maanila Congress for claiming the bicycle symbol for the upcoming elections.

The Hindu (Tamil)

Dated: 26.02.2024

# தேர்தல் நடைமுறையின் சிற்பி சுகுமார் சென்

●புதுடெல்லி

இந்தியாவின் முதல் நாடாளு மன்றத் தேர்தல் 1951-52-ல் நடைபெற்றது. இந்தத் தேர்தலுக்கு சுகுமார் சென் தலைமை தேர்தல் ஆணையராக இருந்தார். போதிய கட்டமைப்புகள் இல்லாத அந்தக் காலகட்டத்தில், அவர் தேர்தலை வெற்றிகரமாக நடத்திக்காட்டியது சர்வதேச அளவில் கவனம் ஈர்த்தது.

அதன்பிறகு இந்திய தேர்தல் நடைபெறுவதை நேரில் காண பல வெளிநாட்டினர் வருகின்றனர். இந்நிலையில், சூடான் அரசு தங்கள் நாட்டில் தேர்தலை நடத்த சுகுமார் சென்னை அழைத்தது.

சூடானின் அழைப்பை ஏற்று சுகுமார் சென் அந்நாட்டுக்குச் சென்றார். அங்கு 14 மாதங்கள் செலவிட்டு தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இதுகுறித்து இந்திய தேர்தல் ஆணையத்தின் குறிப்பில், "இந்தியா அதன் முதல் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்திக்காட்டியதையடுத்து மத்திய கிழக்கு, ஆப்ரிக்க, தென் அமெரிக்க நாடுகள் தங்கள் நாட்டில்



↑ சுகுமார் சென்

செயல்படுத்துவதற்காக தேர்தல் நடைமுறை குறித்து இந்தியாவிடம் விரிவான தகவல் கேட்டது. சூடானில் தேர்தலை நடத்துவதற்கு, சர்வதேச ஆணையத் தலைவராக அப்போதைய இந்திய தலைமை தேர்தல் ஆணையர் சுகுமார் சென் பரிந்துரைக்கப்பட்டார். அவர் சூடானில் 14 மாதங்கள் தங்கி, அந்நாட்டுக்கு ஏற்ற தேர்தல் நடைமுறை விதிகளை உருவாக்கினார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

17-வது இந்திய தலைமை தேர்தல் ஆணையர் குரேஷி தன்னுடைய, 'ஆவணப்படுத்தப்படாத ஒரு அதிசயம்: மாபெரும் இந்தியத் தேர்தல்' நூலில் இந்திய தேர்தல் நடைமுறையில் சுகுமார் சென்னின் பங்களிப்புப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் கூறும்போது, "இந்தியாவின் தேர்தல் நடைமுறையை கட்டமைத்தவர் சுகுமார் சென். அன்றைய கால கட்டத்தில் எந்த வசதிகளும் கிடையாது. அப்படியான சூழலிலும் இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலை அவர் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். இன்று இந்திய தேர்தல் என்பது, அதன் வெளிப்படை மற்றும் ஜனநாயகத் தன்மைக்காக உலக அளவில் கவனிக்கப்படக்கூடியதாக உள்ளது. இதற்கு சுகுமார் சென்னின் பங்கு மிக முக்கியமானது" என்று பாராட்டி எழுதியுள்ளார்.

சுகுமார் சென், இந்திய தலைமை தேர்தல் ஆணையராக நியமிக்கப்படுவதற்கு முன்பாக, மேற்குவங்க மாநிலத்தின் தலைமை செயலராக பணியாற்றிவந்தார். இந்திய அரசு அவருக்கு கடந்த 1954-ம் ஆண்டு பத்மபூஷண் விருது வழங்கி கவுரவித்தது.

India's first CEC Sukumar Sen drafted Sudan's 1953 polls.

Daily Thanthi
Dated: 26.02.2024

5

### விஜயதரணி ராஜினாமா ஏற்பு:

# நாடாளுமன்ற தேர்தலுடன் விளவங்கோடு தொகுதிக்கும் இடைத்தேர்தல்?

சென்னை, பிப்.26-
விஜயதரணியின் எம்.எல்.ஏ. பதவி ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்ட நிலையில், நாடாளுமன்ற தேர்தலுடன் விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடைபெற வாய்ப்பு இருக்கிறது.

## விஜயதரணி ராஜினாமா

தமிழக காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ. விஜயதரணி (விளவங்கோடு தொகுதி), நேற்று முன்தினம் திடீரென டெல்லியில் பா.ஜனதா கட்சி தலைவர்களை சந்தித்து அக்கட்சியில் இணைந்தார்.

இந்த நிலையில், சபாநாயகர் அப்பாவுக்கு விஜயதரணி எழுதியுள்ள கடிதத்தில், "நான் எனது தமிழக சட்டமன்ற உறுப்பினர் பதவியை பிப்ரவரி 24-ந் தேதி முதல் ராஜினாமா செய்கிறேன்" என்று கூறப்பட்டு இருந்தது

இதற்கிடையே நெல்லையில் சபாநாயகர் அப்பாவு நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

## கட்சித்தாவல் தடை சட்டம்

குமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வாக தேர்ந்து எடுக்கப்பட்ட விஜயதரணி, பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்து உள்ளதாக ஊடகங்கள் வழியாக தெரிய வந்தது. அதன் தொடர்ச்சியாக காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை இணையம் வாயிலாக கடிதம் ஒன்றை சபாநாயகரான எனக்கும், சட்டமன்ற முதன்மை செயலாளருக்கும் அனுப்பி இருந்தார்.

அதில், விஜயதரணி எம்.எல்.ஏ. இந்திய அரசியலமைப்பு சட்டப்படி காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினராக இருக்கும் நிலையில் மாற்றுக் கட்சியான பாரதீய ஜனதாவில் இணைந்துள்ளார். அவர் மீது கட்சித்தாவல் தடை சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்து, பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

## ராஜினாமா ஏற்பு

இதையடுத்து விஜயதரணி தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வதாக இணையவழியில் கடிதம் அனுப்பி உள்ளார். அவர் சட்டசபை விதி 21-ன் கீழ் 'எப்'-படிவத்தில் தனது கைப்பட எழுதி பூர்த்தி செய்து அனுப்பி வைத்துள்ளார். அதை பரிசீலனை செய்து பார்த்தபோது, முறைப்படி பதவி விலகல் கடிதம் அளித்து இருப்பது உறுதியானது. மேலும் அவர் இன்று (அதாவது நேற்று) காலை என்னிடம் தொலைபேசியில் பேசினார். அப்போது காங்கிரஸ் கட்சியில் இருந்து பாரதீய ஜனதா கட்சிக்கு சென்றிருப்பதால் எம்.எல்.ஏ. பதவியை விட்டு விலகுவதாக கூறினார்.

முறையாக ராஜினாமா கடிதம், படிவம் கொடுத்து உள்ளார். அதனால் அவரது ராஜினாமாவை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவரது பதவி பறிக்கப்படவில்லை. ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது. இனிமேல் தேர்தல் ஆணையத்துக்கு தகவல் அளிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## நாடாளுமன்ற தேர்தலுடன் இடைத்தேர்தல்

எனவே, விஜயதரணியின் ராஜினாமா கடிதம் தேர்தல் ஆணையத்துக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. தேர்தல் ஆணையத்திடம் கடிதம் கிடைத்ததும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதி காலியானதாக அறிவிக்கப்படும். பொதுவாக, ஒரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால், அடுத்த 6 மாதத்துக்குள் இடைத்தேர்தல் நடத்தி முடிக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது.

எனவே, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுடன் விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலையும் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் திட்டமிடும் என்றே தெரிகிறது. அவ்வாறு நடந்தால், நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்படும் நாளில், விளவங்கோடு தொகுதி இடைத்தேர்தலுக்கான தேதியும் அறிவிக்கப்படும்.

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

ஏற்கனவே, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 4-ந் தேதி ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. திருமகன் ஈவெரா மாரடைப்பால் மரணம் அடைந்ததை தொடர்ந்து, பிப்ரவரி 27-ந் தேதி நடைபெற்ற நாகாலாந்து, மேகாலயா மாநில சட்டசபை தேர்தலுடன் அந்த தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. திருமகன் ஈவெராவின் தந்தை ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனே வேட்பாளராக

(3-ம் பக்கம் பார்க்க)

## திருக்கோவிலூர் தொகுதியின் நிலை என்ன?

கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது, தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் தொகுதியில் இருந்து உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் க.பொன்முடி. இவர், உயர் கல்வித்துறை அமைச்சராகவும் இருந்து வந்தார். வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் அவர் சிறை தண்டனை பெற்ற நிலையில், அவரது அமைச்சர் பதவியும் பறிபோனது. எம்.எல்.ஏ. பதவியை வகிக்கும் தகுதியையும் இழந்தார்.

இந்த நிலையில் திருக்கோவிலூர் தொகுதியின் நிலையையும் சபாநாயகர் அப்பாவு, தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்தால், அந்த தொகுதிக்கும் விளவங்கோடு தொகுதியுடன் சேர்த்து இடைத்தேர்தல் நடைபெறும் என்று தெரிகிறது. எனவே, தமிழ்நாட்டில் இடைத்தேர்தல் ஒரு தொகுதிக்கா? அல்லது இரு தொகுதிகளுக்கா? என்பது நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னதாக தெரிந்துவிடும்.

# நாடாளுமன்ற தேர்தலுடன்...

1-ம் பக்க தொடர்ச்சி

களம் இறக்கப்பட்டு வெற்றியும் பெற்றார்.

இதேபோலத்தான், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடத்த வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. பொதுவாக, தி.மு.க. கூட்டணியில் எந்த கட்சிக்கு எந்த தொகுதி ஒதுக்கப்பட்டு உள்ளதோ, அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும்போது, அதே கட்சிக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலே சாட்சி.

## காங்கிரஸ் கட்சிக்கே வாய்ப்பு

அந்த வகையில், விளவங்கோடு தொகுதி மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கே வழங்கப்படும் என்று தெரிகிறது. எனவே, காங்கிரஸ் கட்சி சார்பில் வேட்பாளராக யார் களம் இறக்கப்படுவார்? என்ற கேள்வியும் தொடர்ச்சியாக எழுகிறது.

இதுகுறித்து, மூத்த காங்கிரஸ் கட்சி நிர்வாகி ஒருவரிடம் கேட்டபோது, "விஜயதரணி காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறியதால், விளவங்கோடு தொகுதியில் உள்ள காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு எல்லாம் மகிழ்ச்சி. அவர் தொகுதி பக்கமே செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. தற்போது, அவர் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி பா.ஜனதாவில் இணைந்திருக்கிறார். அதுவும், நாடாளுமன்ற தேர்தலில் குறிப்பிட்ட தொகுதியில் போட்டியிட வாய்ப்பு தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அவர் அங்கு சென்றிருக்கிறார். நாடாளுமன்ற தேர்தலுடன் விளவங்கோடு தொகுதிக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டால், இந்த தொகுதியில் இருந்தே காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஒருவர் வேட்பாளராக களம் இறக்கப்படுவார்" என்றார்.

Bye-Election to Vilavango constituency along with Parliamentary Election due to acceptance of Vijayatharani's resignation.

6

DINA MALAR

Dated: 25.02.2024

# 'வாக்காளர்களுக்கு வெகுமதி தருவதை தேர்தல் கமிஷன் பொறுத்துக் கொள்ளாது!'

சென்னை, பிப். 25–

தமிழகத்தில் லோக் சபா தேர்தல் ஏற்பாடுகள் குறித்து, ராஜிவ்குமார் தலைமையில், கடந்த இரண்டு நாட்களாக, சென்னையில் ஆலோசனை நடத்தப்பட்டது. அதுகுறித்து, ராஜிவ்குமார் நேற்று அளித்த பேட்டி:

பெரும்பாலான கட்சிகள், 'பணபலத்தை கட்டுப்படுத்த வேண்டும். பணம் வினியோகம் செய்யும் வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்' என்று வலியுறுத்தின.

தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள், ஒருதலைபட்சமாக நடக்கக்கூடாது. தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படை தன்மையுடனும் நடத்த வேண்டும் என்பதில், தேர்தல் கமிஷன் உறுதியாக உள்ளது.

தமிழகத்தில், 39 லோக் சபா தொகுதிகள் உள்ளன; 6.19 கோடி வாக்காளர்கள் உள்ளனர். பெண் வாக்காளர்கள் அதிகம். மாற்றுத் திறனாளி வாக்காளர்கள்



ராஜிவ்குமார்

சேர்க்கப்பட்டுள்ளனர். வாக்காளர்களில், 9.18 லட்சம் பேர், 18 முதல் 19 வயதுக்கு உட்பட்டவர்கள்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, 65 ஆயிரம் விண்ணப்பங்கள், 17 வயது உள்ளவர்களிடம் இருந்து வந்துள்ளன. அவர்கள் வயது 18 ஆகும்போது சேர்க்கப்படுவர். ஓட்டுச்சாவடிகள், 68,144 உள்ளன. இவற்றில், 66 சதவீத ஓட்டுச்சாவடிகளில், 'வெப் கேமரா' பொருத்தப்பட உள்ளது. அனைத்து ஓட்டுச் சாவடிகளிலும், குடிநீர், மின்சாரம், கழிப்பறை, சாய்தளம், சக்கரநாற்காலி வசதிகள் இருக்கும்.

தேர்தல் விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள், 'சி விஜில்' மொபைல் போன் செயலி வழியாக புகார் தெரிவிக்கலாம். இது குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மாநில எல்லைகள் உள்ளிட்ட பகுதிகளில், 145 சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு, கண்காணிப்பு பலப்படுத்தப்படும். மத்திய, மாநில அரசுகளின் செயலாக்கத் துறைகளுடன் இணைந்து சோதனைகள் நடத்தப்படும்.

மதுபானம், இலவச பொருட்கள் வினியோகம் கண்காணிக்கப்படும். ஏ.டி.எம்., மையங்களுக்கு மாலை 6:00 மணிக்கு மேல், பணம் எடுத்து செல்ல அனுமதிக்கப்படாது. அனைத்து மத்திய, மாநில அமலாக்கத் துறை, வாரம் ஒரு முறை, சோதனை குறித்து அறிக்கை அளிக்கும்.

அனுமதிகள் பெற, ஒற்றை சாளர முறை உருவாக்கப்படும். ஓட்டுப்பதிவுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு 'பூத் சிலிப்' வழங்கப்படும். பணம் மற்றும் வெகுமதிகள் வழங்கப்படுவதை தடுக்க, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க, மாவட்ட கலெக்டர்கள் மற்றும் போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

'ஆன்லைன்' வழியாக பணம் பரிமாற்றம் செய்யப்படுவது கண்காணிக்கப்படும். அரசியல் கட்சிகளுக்கு, விதிமுறைகளின்படி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. மின்னணு ஓட்டுப் பதிவு இயந்திரம், பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படுகிறது. 'விவிபேட்' ஏற்கனவே பயன்படுத்தப்படுகிறது.

இது தொடர்பாக, 100க்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளோம். அதன் விபரம், தேர்தல் கமிஷன் இணைய தளத்தில் உள்ளது. தேர்தல் பத்திரங்கள் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்பதில், தேர்தல் கமிஷன் உறுதியாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

Election Commission will not tolerate rewarding Voters - ECI

Dt. Next, Dated: 26.02.2024

# India's 1st CEC Sukumar Sen drafted Sudan's 1953 polls

**NEW DELHI: India's maiden Lok Sabha polls in 1951-52 which had created ripples worldwide also caught Sudan's fancy and it invited then Chief Election Commissioner Sukumar Sen to conduct its first parliamentary elections in 1953.**

According to the Election Commission archival records, Sen spent 14 months organising the polls in Sudan, drawing heavily from Indian election literature and laws and making suitable amendments to suit the need of the Afro-Arabic nation.


The success of the first general elections (1951-52) put India on the solid ground of democracy, according to the ECI's archival literature.

"Numerous enquiries were received from countries in the middle east, Africa and South America for detailed information on the elections. Sukumar Sen, the Chief Election Commissioner, was nominated to chair an International Commission to hold elections in Sudan, a former British colony," the records said.

"The elections in Sudan based on universal adult suffrage were a success not withstanding its literacy rate of mere two per cent," it added.

In 1954, when the Indian government instituted civilian awards, Sen was bestowed upon the Padma Bhushan for his contribution. Sen, an officer of the Indian Civil Service, was the chief secretary of West Bengal when he was called to be the first chief Election Commissioner of India. "India's reputation as a democratic nation received further international endorsement when Lok Sabha Speaker GV Mavalankar was elected as the Chairman of the General Council of the Commonwealth Parliamentary Association in 1956 in Jamaica. It was the first time that an Asian member had been elected to the Chair," the records said.

Sukumar Sen's role in setting off the tone for the democratic exercise has also been acknowledged by 17th Chief Election Commissioner SY Quraishi in his book "An undocumented wonder: The Great Indian Election".



**An archival photograph of 1952 showing a voter at a polling station, displayed at a poll museum in New Delhi**